**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 76/2015**

**Deposition of Witness for : PW 12**

**Name** : டாக்டர். செல்வமுத்துகுமார்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-04-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது அரசு பணியில் விருப்ப ஓய்வு பெற்று தனியாக தொழில் செய்து வருகிறேன். தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசியராக 2011 முதல் 2022 வரை பணிபுரிந்து வந்தேன். 1.9.2013 அன்று நான் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது சக்திவேல் என்பவர் வயிற்றில் பலமாக அடிப்பட்டு மிகவும் மோசமான நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தார்.. மேற்கொண்டு அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு வயிற்றில் பலமாக அடிப்பட்டதுடன் குடல் கிழிந்து இருக்க வாய்ப்பு இருப்பதாக கருதி அனைத்து பரிசோதனைகளும் மேற்கொண்டோம். பரிசோதனை முடிவில் அவருக்கு வயிற்றில் குடலில் அடிப்பட்டு இருப்பது தெரியவந்தது. அவரின் நிலைமை மோசமாக உள்ளதால் அவரது உயிரை காப்பாற்ற உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று அவரது உறவினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சம்மதித்த பின் 1.9.2013 மதியம் 2 மணிக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவை சிகிச்சையின் போது உள்ளே சிறு குடலில் ஓட்டை ஏற்பட்டு இருப்பதால் வயிறு முழுவதும் மலம் நிரம்பி இருந்தது. அதற்கான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவை சிகிச்சை முடிந்த பின் அவரது உடல் நிலை மோசமாக இருந்ததால் தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டது. ஆனால் அவரது உடல் நிலை மேலும் மேலும் மோசமாகிக்கொண்டு வந்ததால் எவ்வளவு முயற்சி செய்தும் சக்திவேல் என்பவர் 2.9.2013 அன்று காலை 4.20 மணிக்கு இறந்து விட்டார் என்று சான்று அளிக்கிறேன். அது சம்மந்தமாக நான் வழங்கிய மருத்துவ கோப்பு அ.சா.ஆ.5. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

ஒம்/- செல்வமுத்துகுமார்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 76/2015**

**Deposition of Witness for : PW 13**

**Name** : டாக்டர். கிருஷ்ணகுமார்

**Father Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-04-2023.**

**(A1 to A3 present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவ கல்லூரியில் எலும்பு முறிவு சிகிச்சை பிரிவில் மேற்படிப்பு படித்து வருகிறேன். கடந்த 2013ல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை தருமபுரியில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது 2.9.2013 அன்று மதியம் 2 மணியளவில் மேல்செங்கம் காவல் நிலைய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் படி இறந்து போன சக்திவேல் என்பவரை பிரேத பரிசோதனை செய்ய சென்ற போது மேல் செங்கம் காவல் நிலைய முது நிலை காவலர் தங்கதுரை பிரேதத்தை அடையாளம் காட்டினார். சடலக்கூராய்வு மதியம் 2.15 மணிக்கு துவங்கப்பட்டது. சடலத்தின் கை மற்றும் கால்களில் விறைப்பு தன்மை காணப்பட்டது. உடல் படுத்த நிலையில் கண்கள் மற்றும் வாய் மூடி இருந்தது. பற்கள் மேல்தாடையில் இடது பக்கம் 8 வலது பக்கம் 7ம், கீழ் தாடையில் வலது பக்கம் 8 இடது பக்கம் 8 ம் காணப்பட்டது. வெளிப்புற காயங்கள் - தைக்கப்பட்ட காயம், கிழிந்த காயம் வயிற்றின் நடுப்பகுதியில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. மருத்துவமனையில் அவரின் வயிற்றில் சிகிச்சை அளித்ததற்கான அடையாளங்கள் காணப்பட்டது. 4க்கு 3 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் இடது விரைப்பையில் காணப்பட்டது. நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்தது. நெஞ்சக்கூடு நடு எலும்பு நன்றாக இருந்தது. வில எலும்புகள் இரண்டு பக்கமும் நன்றாக இருந்தது. நுரையீரல் இரண்டு பக்கமும் நன்றாக இருந்தது. இருதயம் அறைகள் காலியாக காணப்பட்டது. கூராய்வு செய்த போது அனைத்து அறைகளும் நீர்கோத்த நிலையில் இருந்தது. வயிறு காலியாக இருந்தது. கல்லீரல், மண்ணீரல் சாதாரண நிலையில் இருந்தது. கூராய்வு செய்த போது கலங்கிய நிலையில் இருந்தது. சிறுநீரகம் சாதாரண

நிலையில் இருந்தது. கூராய்வு செய்த போது நீர்கோத்த நிலையில் இருந்தது. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. பிறப்பு உறுப்பு இயல்பு நிலையில் இருந்தது. வயிற்று பகுதியில் சுமார் 1 லிட்டர் அளவிற்கு நீர் காணப்பட்டது. மேலும் 20 மி.லிட்டர் சீழும் காணப்பட்டது. சிறு குடலின் ஒரு பகுதியில் சிகிச்சைக்கான தையல் காணப்பட்டது. மண்டை ஓட்டை பரிசோதனை செய்ததில் மூளை சுற்றியுள்ள ஜவ்வு சாதாரண நிலையில் காணப்பட்டது. மூளையும் சாதாரண நிலையில் இருந்தது வெட்டிப் பார்த்த போது நீர் கோர்த்து காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகளை ரசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது. ரசாயண பகுப்பாய்வில் உடல் உள்ளுப்புகளில் நச்சுப் பொருட்கள் மற்றும் மது அருந்தியதாக கண்டறியப்படவில்லை. இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு 6 முதல் 12 மணி நேரத்திற்கு முன்பு வயிற்றில் உள்ள முக்கிய உள்ளுறுப்புகள் அடிப்பட்டு அதனால் ஏற்பட்ட அதிர்வின் காரணமாக இறந்திருக்கக்கூடும் என்று சான்று வாங்கினேன். நான் வழங்கிய பிணக்கூராய்வு அறிக்கை அ.சா.ஆ. 6. நஞ்சியல் அறிக்கை அ.சா.ஆ.7. பயாலஜி அறிக்கை அ.சா.ஆ.8. என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> -** இல்லை.

ஒம்/- கிருஷ்ணகுமார்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.